# பெண்கள் உரிமைகள்



சரோஜா சிவசந்திரன் M.A

# பெண்கள் உரிமைகள்

சரோஜா சிவசந்திரன் M.A.
மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்.

European Union
යුරෝපා සංගමය ஐரோப்பிய ஒன்றியம்

தலைப்பு : **பெண்கள் உரிமைகள்**

ஆசிரியர் : **சரோஜா சிவசந்திரன் M.A**

வெளியீடு : **மகளிர் அபிவிருத்தி நிலையம்,**
இல: 07, இரத்தினம் ஒழுங்கை,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4398

அச்சிட்டோர் : **தீபம் பிறிண்டேர்ஸ்**
இல: 717 கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

---

ISSN: 1800 -3109
ISBN: 977-180-03100-0-2

# பெண்கள் உரிமைகள்

## அறிமுகம்

பெண்களுக்கு சமவாய்ப்புக்களும் சமசந்தர்ப்பங்களும் உறுதிப் படுத்தப்படும் என்று அரசியல் யாப்பு முன்வைத்திருந்த போதிலும் பெண்கள் உரிமைகள் தொடர்பாக நாம் சிறப்பாகப் பேசவேண்டிய தேவை ஏன்? என்ற கேள்வி எழலாம். பெண்களுக்கான தேவைகளில் பல பிரத்தியேகமானவை. பெண்கள் ஓரங்கட்டப்படுவதும், பாரபட்சப்படுவதும் அவர்களது உரிமைகள் மீறல் என்ற வரையறைக்குள் அடக்கப்படவில்லை. ஆயினும் மகளிர் அமைப்புக்களின் ஓயாத அழுத்தங்களும் பரப்புரைகளும் உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தப்பட்ட செயற்திட்ட அறிக்கைகளும் பெண்கள் உரிமைகளை முன்வைத்து நடத்தப்பட்ட போராட்டங்கள், பிரச்சாரங்கள் பலவும் இன்று பெண்கள் உரிமைகட்கு முக்கியத்துவத்தைக் கொடுத்துள்ளதோடு இவ்வுரிமைகள் மீறப்படுதல் மனித உரிமை மீறப்படுவதற்கு சமமானது என கூறப்பட்டுள்ளது. சமூக நலன்களோடு தொடர்புடைய செயற்திட்டங்களை மையமாகக்கொண்ட உரிமைகள் யாவும் 1995இல் பெண்கள் நான்காவது உலக மாநாட்டின் செயற்திட்ட அறிக்கையில் விரிவாக ஆராயப்பட்டுள்ள தோடு இவற்றை செயற்படுத்தும் அழுத்தங்களையும் நாடுகளுள் ஏற்படுத்தியுள்ளது.

பெண்கள் உரிமைகள் தொடர்பாக படிப்படியான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதோடு பெண்கள் சமாதானம், பாதுகாப்பு, அபிவிருத்தி தொடர்பாக ஐ.நா பாதுகாப்பு சபையின் 1325 மரபொழுங்கு இன்று முன்னிலைப்படுத்தப்பட்டு பெண்களின்



அரசியல் உள் ஆக்கங்களை மேலதிகமாக ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது. போரினால் பாதிப்புற்ற மக்களின் பாதுகாப்பு, அபிவிருத்தி என்பன பெண்கள் சிறப்பான உரிமைகள் என்பதை இம்மரபொழுங்கு வலியுறுத்தும் அதே நேரம் இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற அழுத்தங்களையும் அரசுக்கு கொடுத்து வருகின்றது. பெண்கள் உரிமைகள் தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்ட விடயங்கள், ஐ.நா மரபொழுங்குகள் போன்ற விடயங்களை சகலரும் இலகுவாக விளங்கிக் கொள்ளும் வகையில் இக் கை நூல் வெளிப்படுத்தப் படுகின்றது. இக் கை நூலை ஆக்குவதற்கு அனுசரனை வழங்கிய தேசிய பேரவை, மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் எமது நன்றிகள்.


சறோஜா சிவச்சந்திரன்,
நிர்வாக பணிப்பாளர்
மகளிர் அபிவிருத்தி நிலையம்.

# சர்வதேச மகளிர் தினம்




மார்ச் 8ம் திகதி சர்வதேச பெண்கள் தினமாகும்.உலகம் பூராகவும் இப் பெண்கள் தினம் பல்வேறு நிலைகளில் கொண்டாடப்படுகின்றது. பெண் உரிமை, பெண் சமத்துவம், பெண் விடுதலை போன்ற முழக்கங்கள் உலகின் எல்லாத் திசைகளிலும் ஓங்கி ஒலிக்கின்றன. பெண்ணியம் பற்றிய புதிய கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இன்று பெண் விடுதலை பற்றிய விழிப்புணர்வுகளும் அக்கறைகளும் என்றுமில்லாதவாறு முன்னெழுந்து காணப்படுகின்றது. அவற்றின் ஒருங்கிணைந்த தன்மையை சர்வதேச பெண்கள் தினமான மார்ச் 8ம் திகதிகளில் உலகம் முழுவதிலும் கேட்க முடிகின்றது.

ஆண், பெண் இருபாலாரையும் உள்ளடக்கியதாகவே மனித வரலாறு வளர்ச்சியடைந்து வந்துள்ளது. பெண் முன்பு தாய்வழிச் சமூக அமைப்பிலே முதன்மை நிலையிலும் சமத்துவம் கொண்ட




சூழலிலும் பாதுகாப்பாக வாழ்ந்து வந்தாள். ஆனால் தனிச்சொத்துடமையும், வேலைப் பிரிவினையும் தந்தை வழிச் சமூக ஆதிக்கமும் பெண்ணை 2ம் நிலைக்குத் தள்ளியது. அவளது சுதந்திரம் முடக்கப்பட்டது. சமத்துவம் படிப்படியாகப் பறிக்கப்பட்டு, பெண்வீட்டில் அடிமையாகவும் ஆணுக்கு கீழ்ப்பட்டவளாகவும் தள்ளப்பட்டாள். இந்நிலை நிலவுடமை கால சமூக அமைப்பிலே மேலும் இறுக்கமடைந்தது.

பெண்கள் அலங்காரப் பொருட்களாகவும் ஆணின் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பதுமைகளாகவும், விலங்கிடப் பட்டனர். இன்று இலங்கையில் யுத்தத்தின் பின்னரான நிலைப் பாட்டிலே கணவரை இழந்த விதவைகளின் தொகை அதிகரித் துள்ளது. துயரத்தை அதிகரித்து க்கொண்டு போரினால் பாதிக் கப்பட்ட பெண்கள் இன்று அமைதியில் நாட்டம் கொண்டு ள்ளனர். ஒரு போர்ப் பண்பாட்டி லிருந்து ஓர் அமைதிப் பண்பாட்டிற்கு மாறுவது என்பது கடினமான செயல்.பெண்கள் அனுபவித்து வரும் துயரங்கள், வன்முறைகளில் ஆண்களுக்கு பங்கில்லை என்று தட்டிக்கழித்து விடமுடியாது. ஒருமாற்றம் தேவையாயின் அம்மாற்றத்தை ஏற்படுத்த ஒவ்வொருவரும் தேவை. சமூகம் பெண்களுக்கான மேம்பாட்டு முன்மாதிரிகளையும் வாழ்க்கை முன்மாதிரிகளையும் திணிப்பதை நிறுத்த வேண்டும். இத்திணிப்புக்கள் பெண்களின் வாழ்விற்கான உரிமைகளைத் தூக்கி எறிந்து விடுகின்றன. பெண்கள் மேம்பாடு என்பது இன்று கேள்விக்குறியாகவே உள்ளது. இராணுவ ஆதிக்கங்களும், அதிகார கெடுபிடிகளும் பெண்கள் சுமைகளை அதிகரித்துள்ளன. இன்று அதிகரித்து வரும் வன்முறைப் போக்குகள் பெண்களின் முன்னேற்றத்தின் முக்கிய தடைகற்களாக, அவர்கள் உடல், உளநல மேம்பாட்டை தாக்குகின்றன. வன்முறைகளுக்கு அஞ்சி, ஒதுங்கி ஒளிந்து வாழும் பெண்களின் மனப்பாங்கில் தீவிர மாற்றங்கள் ஏற்படுவது அவசியமானதொன்றாகும். வன்முறைகள் நடந்தபின் போர்க்கொடி தூக்குவதில் மட்டுமே எமது சமுதாயம் கவனம் செலுத்துகின்றது. இவற்றை வளரவிடாது தடுத்து. வருமுன் காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பெண்கள் முன்வர வேண்டும்.



பெண்கள் உரிமைகளை இப்புதிய நூற்றாண்டிலே நாம் நடைமுறையில் செயற்படுத்த வேண்டிய சூழ்நிலையை வலுப்படுத்த வேண்டிய தேவை நம்முன்னேயுள்ளது. புதிய அணுகுமுறையில் பெண்கள் அமைதியான வாழ்வும் உறுதிப் படுத்தப்பட வேண்டும். வன்முறைப் போக்கின் இழிநிலையி லிருந்து விடுபடும் நிலைக்கு வழிகாட்டியாக போரின் கொடூரத்தைப் போக்கும் அமைதி நிலையை அடையப் பெண்கள் இத்தினத்தில் உறுதியுடன் செயற்படுவது அவசியம். பெண்களின் உரிமைகளை உறுதிசெய்து அவர்கள் சமத்துவத்துடனும் சமஅந்தஸ்துடனும் வாழவழி செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கும் நாள் இதுவாகும்.



# உங்கள் உரிமைகளை தெரிந்து கொள்ளுங்கள்

## பெண்கள் உரிமைகளும் மனித உரிமைகளே?



*1993ஆம் ஆண்டு வியன்னாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டில் பெண்கள் உரிமைகள் மனித உரிமை என்ற எண்ணக்கரு உறுதி செய்யப்பட்டது. 1948 ஐ.நா மனித உரிமைகள் பிரகடனம், மற்றும் 197இல் பெண்களுக்கெதிரான சகல வித பாரபட்சங்களையும் ஒழித்தல் தொடர்பான மரபொழுங்கு இவை யாவும் பெணகள் தொடர்பான பாரபட்சங்களை ஒழிப்பதற்கு தேவையான கருத்துக்களை உள்வாங்கி இருந்த போதிலும் பெண்கள் பெணகள் உரிமைகளும் மனித உரிமைகளே என ஏன் கூக்குரலிடுகின்றனர் என்ற கேள்வி எழலாம்.*

*எப்படியான சர்வதேச உடன்படிக்கைகள் பாரபட்சங்களுக் கெதிரான மரபொழுங்குகள் ஏற்பட்டிருந்த போதிலும்*

பெணகளுக்கெதிரான பாரபட்சங்கள் உலகில் எங்கோ ஓர் மூலையில் நடைபெற்றுக கொண்டே இருக்கின்றன. பெண்கள் உலக குடித்தொகையில் அரைப்பங்கிற்கு லோக இருந்தும், அரசியல் தலைமைப்பதவிகளில் 5-10 வீதத்தையே வகிக்கின்றனர். இன்று பல நாடுகளிலும் கல்வி கற்காதோர் தொகையில் பெண்களே அதிகம். பெண்களுக்கான சட்டரீதியான பாதுகாப்பிற்கும், அவர்கள் பாரபட்சமாக ஓரங்கட்டப்படுவதற்கும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் வேறுபாடுகளை குறைக்க வேண்டுமாயின் பெண்களினது உண்மையான வாழ்வோடு ஒத்த பல வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்ய வேண்டியுள்ளது.

மனித உரிமைகள் சாசனத்தில் பெண்கள் உரிமைகள் ஒருங்கிணைந்த ஓர் பகுதியாகவே உள்ளது. பெண்கள் இன்று உலகளாவிய ரீதியில் பல மாநாடுகளை நடத்தியுள்ளனர். 1985ஆம் ஆண்டில் கைரோபி மாநாடு, 1993இல் வியன்னாவில் மனித உரிமைகள் மாநாடு, 1994இல் கைரோவில் குடித்தொகை மாநாடு என பல மாநாடுகளில் பெண்களின் பொது வாழ்வு, வீட்டு வன்முறைகள் திட்ட அமைப்புக்கள் தொடர்பாக பெண்கள் பேசி வருகின்றனர். இவை யாவும் பலமான சக்திகளாக முனைப்பைக் காட்டவில்லை.

ஐ.நா சபையில் பெண்களுக் கெதிரான வன்முறையை கண்காணிப்பதற்காக ஓர் சிறப்பு பிரதிநிதி நியமிக்கப்பட்டால் பெண்களுக்கு கிடைத்த வெற்றியாகும். பெண்களுக் கெதிரான வன்முறைதொடர்பான சீடோவின் மாற்று வழி மூலம் பெண்கள் தாமாகவே வன்முறைகள் தொடர்பாக முறைப்பாடுகளை கொண்டு வர முடியும் என்பதை வலியுறுத்தி நாம் பிரச்சாரம் செய்துள்ளோம். பெண்கள் கல்வி மற்றும் அரசியல் அணுகுமுறைகளிலும் பொருளாதார முறைமைகளிலும்பாரபட்சம் காட்டப்படுகின்றனர்.

*மற்றும் சட்ட ரீதியான வழி காட்டல்களும் அவர்கட்கு குறைவாகவே உள்ளன. ஆகவே பெண்கள் தமக்கு பாதுகாப்பு வழங்கக்கூடிய சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப் கட்ட மர பொழுங்குகள் பெண்கள் உரிமைகளை எவ்வாறு வரையறுக்கின்றன, பாதுகாக்கின்றன என்பதை அறிதல் முக்கியமானது.*

- ஐ.நாவின் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான ஆவணங்கள்
- மனித உரிமைகள் உலகளாவிய பிரகடனம் (UDHR)
- குடியியல் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச மரபொழுங்கு (ICCPR)
- பொருளாதாரசமூக கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச மரபொழுங்கு
- சகலவிதமான இன ரீதியான பாரபட்சங்களையும் அகற்றுதல் தொடர்பான சர்வதேச மரபொழுங்கு
- சித்திர வதைக்கு எதிரான மரபொழுங்கு
- சிறுவர் உரிமைகள் தொடர்பான மரபொழுங்கு
- பெண்களுக்கான மிக முக்கியமான மரபொழுங்கான சகல விதமான பாரபட்சங்களையும் ஒழிக்கும் மரபொழுங்கு (CEDAW)

# உரிமைகளை மேம்படுத்தல்

## பெண்கள் மனித உரிமைகள் தொடர்பாக மீள்வரையீடு செய்யப்படும் முக்கிய அம்சங்களை இங்கு ஆராயலாம்





சர்வதேச ரீதியிலமைந்த சட்டங்களை விளங்கிக்கொள்வது பெண்கள் பயணத்தின் முதற் படியே. மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் சாதிக்க வேண்டுமாயின் நாமும் இச் சட்டங்களோடு ஈடுபாடு கொள்ள வேண்டும். சட்டங்களை தெரிந்து கொள்வதற்கு சட்டத்தரணியாக இருக்க வேண்டும் என்பதல்ல. எந்தப் பெண்ணும் தனக்கு அநீதி கிடைக்கும் போது தற்போது நடப்பிலிருக்கும் சட்டங்கள் போதாது என்பதை உணர முடியும். ஏனெனில் இவற்றை எழுதியவர்கள் தமது நாடுகளில் குறிப்பிட்ட அரசியல் சமூக பொருளாதார தளங்களை மையமாகக் கொண்டே இவற்றை வரைந்துள்ளனர். சர்வதேச தேசிய சட்டங்களை கூடுதலாக யார் எழுதுகின்றார்கள்? ஆண்கள் இவற்றை எழுதும் போது பெண்கள் பற்றிய தேவைகள், உணர்வுகள் பற்றி எதுவுமே சிந்திபபதில்லை. சட்டத்தை ஆக்குபவர்கள் என்றுமே வறுமையை அனுபவிப்பதில்லை.

இதன் காரணமாக காணி, கடன் வசதிகளை பெறுவது தொடர்பாக பெண்கள் எதிர்நோக்கும் உரிமை மீறல்கள் மனித உரிமைகளில் பெரிதாகக் காட்டப்படுவதில்லை. மனித உரிமைகள் தொடர்பாக எண்ணிலடங்கா ஆவணங்கள் காணப்பட்ட போதிலும், மனித உரிமைகளை இறுக்கமாக நெறிப்படுத்த வேண்டிய சட்டங்கள் போதாததாகவே இன்றும் உள, பெண்கள் எதிர்கொள்ளும் வீட்டு வன்முறை இன்றும் மனித

உரிமைகள் மீறல் என்ற கட்டுக்கோப்புக்குள் வரவில்லை. இதனை பெண்கள் கூட தெளிவாக அறிந்திருக்கவில்லை. சீடோ மரவொழுங்கு கவனத்திற் கொள்ளப்பட்டதன் பின்பே வீட்டு வன்முறைகள் மட்டுமன்றி பெண்கள் எதிர் நோக்கும் சகல விதமாக பாரபட்சங்களும் மனித உரிமை மீறல்களாக கொள்ளப்பட்டன. இதனால் பெண்களுக்கு எவ்வித நன்மை கிடைக்கப்போகின்றது என வினாவலாம். முதலாவதாக அநீதி என்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓர் மனித உரிமை மீறல் என்பது உணரப்பட வேண்டும். உணர்வது மட்டும் போதாது. தமக்கு அநீதி இழைக்கப் பட்டுள்ளதை பெண்கள் எடுத்துக் கூறக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

மனித உரிமை மீறல்கள் தெரியப்படுத்தக் கூடியதாக இருந்தாலும் சட்ட ஆவணங்களில் இவை எடுத்துக்காட்டக் கூடியதாக இல்லை. இன்று ஒருவரின் நீதி நிலமைகளே மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் வளங்கள் எங்கெங்கு செல்ல வேண்டும் என்ற அதிகார பலத்தை கொடுப்பதற்கும உதவியாக உள்ளது. எந்த நாட்டிலும் பெண்களின் சக்தி பலம் வாய்ந்ததாக அமையவில்லை. இவ்வாறாக மனித உரிமை மீறல்கள் பெண்களுக்கெதிராக இடம்பெற்ற போதிலும் சர்வதேச சட்டங்கள் எவ்வாறு இவற்றை பாதுகாக்கின்றன என்றகேள்வியும் எழுகின்றது. ஆகவே இதற்குரிய அடுத்த நடவடிக்கை யாது?




21ஆம் நூற்றாண்டில் ஐ.நா றே வகையான பெண்களுக்கு மிகப்பலமான மரபொழுங்குகளை ஏற்படுத்த முயற்சிக்கலாம். ஆனாலும் பெண்கள் உலகளாவிய தமது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற பல பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**உள்ளூர் மட்டத்தில் பெண்கள் உரிமை மீறல்களை வெளிப்படுத்தல்**

* உள்ளூர் பிரதேச மட்டத்திலும் நாடலாவிய ரீதியிலும் பெண்கள், உரிமை மீறல்களை அடிமட்டத்திலிருந்து மேற்கொள்வதற்காக அழுத்தங்களை கொடுத்து வருகின்றனர். இதன் மூலம் அரசாங்கங்கள பெண்கள் உரிமை மீறல்களை அவதானித்து கவனம் கொடுத்து நடவடிக்கைகள எடுக்கும் படி தூண்டப்படுகின்றனர்.

* மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஊடகங்களினூடாக பெண்கள் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் பல பெண்கள் அமைப்புக்கள் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களினூடாக தொடர்பை வலுப்படுத்தி, மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

* பெண்கள் ஐ.நா பொதுச்சபையில் தமது பிரச்சனைகளை வெளிக்காட்டி அவற்றை ஒட்டிய பலமான பிரச்சாரங்களில் ஈடுபடுவதற்காக போதிய நிதி ஒதுக்கீடு செய்யுமாறும் கேட்டுக்கொள்கின்றனர். இதன் விளைவாக 1975ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் ஆண்டாக பிரகடணம் செய்யப்பட்டது.





## சர்வதேச கொள்கை வரைபுகளை ஒழுங்குபடுத்துவதில் பெண்கள் பங்களிப்பு

உலகின் பல பகுதிகளிலுமிருந்த பெண்கள் ஒன்று கூடி பெஜ்ஜிங் மாநாட்டு வரைபை எழுதினர். இந்நிகழ்வு பெண்களை திட்டமிட்ட சையற்பாடுகளில் ஈடுபடுவதற்கான முதல் முயற்சியாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து 1994இல் ஐ.நா குடித்தொகை மாநாட்லெும் (கைரோ) பெண்கள் கொள்கை வகுப்பாளர்களாக பங்கு பற்றினர்.

சட்டம், தீர்மானம் எடுப்பதிலும் பொருத்தமான நபர்களை உரிய இடங்களுக்கு நியமிப்பதிலும் போதிய நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வதிலும் பெண்கள் அதிக முனைப்புக்காட்டி வருகின்றனர். 1993இல் நடைபெற்ற எலக மாநாட்டைத் தொடர்ந்து பெண்களுக்கெதிரான வன்முறைகளை கண்காணிப்பதற்கு ஓர் உலகளாவிய ரீதியிலான பிரதிநிதி நியமிக்கப்பட்டார்.

பெண்கள் மேலும் பால்நிலை தொடர்பான நிபுணர்கள் ஐ.நா வின் பெண்கள் தொடர்பான செயற்பாடுகளை கண்காணிக்க அனுமதிக்க வேண்டும் என்றும்கோருகின்றனர். இதன் விளைவாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப் பட்டதோடு பால்நிலை தொடர்பான விடயங்களில் காத்திரமான விசாரணைகள் ஏற்பட வழிவகுத்துள்ளது.

மனித உரிமை மீறல்களை சரியான அதிகாரிகள் முன்னிலையில் கொண்டு வந்துவிசாரணைகளை முன்னெடுப் பதற்காக பெண்கள் பரந்தளவில் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

## நடைமுறையிலிருக்கும் சட்டங்களுக்குபுதிய விளக்கங்களை வேண்டி நிற்கும் பெண்கள்



நடைமுறையில் தற்போது இருக்கும் சர்வதேச மரவொழுங் குகட்கு புதிய விளக்கங்கள் தேவை என்பதை பெண்கள் வலியுறுத்தி வருகின்றனர். உதாரணமாக போர் நடைபெறும் காலங்களில் இடம் பெறும் பாலியல் வல்லுறவுகள் ஓர் சித்திர வதையாகவே கருதப்பட வேண்டும்.

தத்தமது துறைகளில் திறமைசாலிகளான பெண்கள் புதிய ஐ.நா ஆவணங்களை பால் நிலை சமத்துவத்தை பேணும் வகையில் உருவாக்குவதில் தமது பங்களிப்பை ஆற்றி வருகின்றனர். பெண்கள் பிரச்சனைகள் குறிப்பாக காணி, வீடு, பெண்களுக்கெதிராகன வன்முறைகள் மகப்பேற்று உரிமைகள் சூழல் உரிமைகள் உடல் ஊனமுற்றோர் உரிமைகள், பாலியல் தொடர்பான உரிமைகள் போன்றவற்றில் புதிய உபாயங்களை வகுப்பதில் பெண்கள் பங்கேற்று வருவது வரவேற்கத்தக்கது.

### வீடு, காணி, உடைமகள் தொடர்பான உரிமைகள்:

வீடு ஒன்றை வைத்திருத்தல் ஓர் அடிப்படை மனித உரிமையாகும். பெண்கள் வீடு, காணி, உடைமைகளை உரித் தாக்குதல், நிர்வாகம் செய்தல் என்பது தொடர்பாக பெண்களுக் கெதிரான சகல விதமான பாரபட்சங்களை ஒழித்தல் தொடர்பான மரபொழுங்கு (CEDAW) குறிப்பிடுகின்றது.

வீடு உரிமையாகக் கொள்வது ஒருவர் சமாதான மாகவும் கௌரவத்துடன் வாழ்வதற்குமான ஓர் உரிமையாகும். வீடு

என்பது வாழக்கூடிய முறையில் பெண்களுக்கு பாதுகாப்பான அமைவிடங்களில் இருத்தல் வேண்டும். இலங்கையில போர் முடிந்து மீள் குடியேற்றம் நடைபெறும் காலகட்டத்தில் வீடு பெண்களுக்கு உரியதாக, பாதுகாப்பாக அமையவில்லை என பல குறைபாடுகள் காட்டப்பட்டுள்ளன. இவ்வாறான ஓர் உரிமையை அனுபவிப்பதற்கு ஒருவருக்கு வீட்டை கட்டுவதற்கான உட்கட்டு மானம், பொருட்களை பெற்றுக்கொள்ளும் வசதி, சட்ட ரீதியான பாதுகாப்பு என்பன பொருத்தப்பாடாக இருத்தல் வேண்டும்.

சர்வதேச, உள்ளூர் பாதுகாப்புச் சட்டங்கள் உள்ளூர் கலாச்சார மரபுகள் யாவும் இருந்த போதிலும் போர், மற்றும் உள்நாட்டுக் கலாச்சாரங்களால் பாதிக்கப்படும் பெண்களுக்கு பாதுகாப்பான இருப்பிடம் இன்மையால் அவர்கள் பல வன்முறைகளைசந்திப்பதோடு, பொருத்தமற்ற இடங்களைத் தவிர்த்து வேறு இடங்களில் இடம் பெயர்ந்தும் வாழ்ந்து வருகி ன்றனர். இதனால் அவர்கள் சுக வாழ்வு, மனநலம் பாதிக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. 1996இல் இஸ்தான்புல்லில் இடம்பெற்ற வாழ்விடம் தொடர்பான உலக மாநாட்டிலும், பெண்கள் உலக மாநாட்டிலும்மனித உரிமைவாதிகள் பெண்களுக்கான வாழ்வீட உரிமைகள் பற்றிகுரல் கொடுத்தனர்.

இம் மாநாடுகளின் எதிரொலியாக, ஐ.நா வின் பொருளாதார சமூக அபிவிருத்திக்கான குழு இவ் விடயம் தொடர்பான கண்காணிப்பை மேற்கொள்வதற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இம் மாநாட்டின் ஆவணங்களை முன்வைத்து பெண்நிலை செயற்பாட்டாளர்கள் உள்நாட்டு அரசாங்கங்களுக்கு தீவிரமான அழுத்தங்களைக் கொடுத்து பெண்களுக்கு பாரபட்சமான உள்ளூர் சட்ட அலகுகளில் திருத்தங்கள தேவை என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் வீடுகள் பெண்களுக்கு வழங்கப்படும் போது அவை நிர்மாணிக்கப்படும் போது அவற்றின் பொருத்தப்பாடு, வசதிகள் தொடர்பாக பெண்கள் கலந்து கொண்டு தமது தீர்மானங்களை மேற்கொளவது அவசியம் என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**வீட்டு உரிமை தொடர்பான ஆவணங்கள்:**

- உலகளாவிய மனித உரிமைகள் சாசனம் *(25)*
- சமூக, பொருளாதார கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச மரபொழுங்கு (உறுப்புகள்)11.1
- பெண்களுக்கெதிரான சகல பாரபட்சங்களையும் ஒழித்தல் தொடர்பான மரபொழுங்கு (14.2h, 16.1h)
- பெண்கள் நான்காவது உலக மாநாட்டு அறிக்கை
- வாழ்விட உலக மாநாட்டு ஆவணம்

**பெண்களுக்கெதிரான வன்முறைகள்:**

பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள சீடோ மரபொழுங்கில் காட்டப்படா விட்டாலும், இவ்வகை வன்முறையானது தனிப்பட்ட, பொது வாழ்வியல் மட்டத்தில் சமூகத்தைப் பாதிக்கும் ஓர் வன்முறையாக உருவெடுத்து உள்நாட்டு, சர்வதேச மட்டத்தில் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

பெண்கள் தொடர்பாக நடைபெற்ற உலக மாநாடுகள் யாவற்றிலும் பெண்களுக்கெதிரான வன்முறை வன்மையாக கண்டிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக ஐ.நா சபையினால் பெண்களுக்கெதிரான வன்முறைகளை விசாரனை செய்து கண்காணிக்கும் வகையில் ஓர் சிறப்பு பிரதிநிதி நியமிக்கப்பட்டார். பெண்களுக்கெதிரான வன்முறை தொடர்பான சீடோ பிரகடனம் மூன்று வகையான வன்முறைகளை கோடிட்டுக் காட்டியுள்ளது.

1. குடும்பங்களில் - பெண்பிள்ளைகள் மனைவி உட்பட அவர்கட்கு அடித்து துன்புறுத்தல் பாலியல் ரீதியாக,மற்றும் சீதனம் தொடர்பாக பெண்கள் பாலியல் உறுப்பு துண்டித்தல் இவைகளுடன்


2. சமூக மட்டத்தில் பாலியல் வல்லுறவு, பாலியல் தொல்லைகள், பாலியல் துஸ்பிரயோகம் இவை இடம் பெறும். பாடசாலைகள், பெண்கள் பாலியல் தேவைகட்காக கடத்தப்படல், வலிந்த விபச்சாரம், இவைகளுடன்

3. போர் காலங்களில் அரசின ஆயுதப்படைகளினால் பெண்கள் பாலியல் பலாத்காரங்கட்கு உட்படுதல் யாவற்றையும் கடக்கின்றது.

வீட்டு வன்முறை, மற்றும் பெண்களது பாலியல் உறுப்பின் துண்டிப்பு (Genetal Mutilation) போன்ற வன்முறைகள் போர் காலங்களில் ஆண்களால் நடத்தப்படும் வேண்டும் என்ற பாலியல் பலாத்காரங்களை இன்று உள்நாட்டு சர்வதேச மட்டத்தில் பெண் செயற்பாட்டாளர்கள் மத்தியில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.

**வீட்டு வன்முறை:**

வீட்டு வன்முறை ஓர் மனித உரிமை மீறலாகக் கௌ்ளப்படுவதில்லை. காரணம் இவை வீட்டில் தனிமையாகவும், குடும்ப உறவோடு இடம்பெறுவதனாலுமாகும். இவ் வன்முறை, பெண்கள் இவை பற்றி வெட்கம், பயம் காரணமாக பேசாதிருப்பது அல்லது முறைப்பாடு செய்யாமை காரணமாக வெளியில் தெரியவருவதில்லை.



இலங்கையில் 2005ஆம் ஆண்டில் வீட்டு வன்முறையை ஒழித்தல் தொடர்பான ஓர் சட்டம் கொண்டு வரப்பட்டு, இன்று நடைமுறையில் உள்ளமை வரவேற்கத்தக்க ஓர் மாற்றமாகும். இச் சட்டத்தை மிகப் பலமுள்ளசக்தியாக செயற்பட வைப்பதற்கு பெண்கள் அமைப்புகள், இலவச சட்ட ஆலோசனை அலகுகள் முயன்று வருகின்றன. இன்றுபாதிக்கப்படும் பெண்கள் பொலிஸ் நிலையங்களிலோ அன்றி மகளிர் அமைப்புக்களின் இலவச சட்டப் பிரிவுகளிலோ மற்றும் அரச இலவச சட்டப் பிரிவுகளிலோ முறைப்பாடு செய்வது அதிகரித்துள்ளது.

## பெண்கள் பாலியல் உறுப்பு சிதைத்தல் (Genetal Mutilation)

இவை பெரும்பாலும் முஸ்லீம் சமூகத்தை கொண்ட பெண்கள் மத்தியில் ஓர் சமய, கலாசார நிகழ்வாக இடம்பெற்று வந்த போதிலும் இந் நிகழ்வு பெண்களைக் கட்டாயப்படுத்தி அவர்கள் பாலியல் ரீதியான ஓர் கொடுமைக்கு உள்ளாக்கப்படுவதை சுட்டிக்காட்டுவதாக மனித உரிமை இணைப்பாளர்கள் தெரிந்துள்ளனர். இந்நிகழ்விற்கு பலமான எதிர்ப்பு இருந்த போதிலும் இன்றும் இந்நிகழ்வு இடம் பெற்று வருவது ஓர் சமூக மாற்றத்தின் தேவையை வலியுறுத்தி நிற்கின்றது.

போர் நடைபெறும் காலங்களில் மிக அதிகமாக பாதிக்கப்படுபவர்கள் படை வீரர்களல்ல சாதரண பொதுமக்களே. இங்கு வன்முறைகள் ஆண், பெண், சிறுவர்கள் என்ற பாகுபாடு இன்று இடம்பெறும். சாதாரண மக்கள் சுடப்படுவர், எறிகணை களால் காயப்படுத்தப்படுவர், அடி உதைகளுக் குள்ளாக்கப்படுவர், சித்திரவதைகட்கு ஆளாக்கப்படுவர், சிறுவர் பெற்றோரைப் பிரிந்து அநாதைகளாக்கப்படுவர் ஆயின் இவை தவிர பெண்கள் பாலியல் ரீதியாக வலிந்து தனியாக அல்லது குழுவாக வல்லுறவிறகு உட்படுத்தப்படுதல் பெண்களை மிக மோசமான உடல், எள பாதிப்புகட்கு உள்ளாக்குகின்றது. எப்படியிருந்த போதிலும் இவை தொடர்பாக தீவிர நடவடிக்கைகள் எடுப்பதற்கான நடவடிக்கைகள் இன்று உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# குடும்ப வன்முறையும் பெண்களும்

இலங்கையில் குடும்ப வன்முறை குறித்து காலத்துக்குக் காலம் விவாதம் எழுவதுண்டு. இந்த விவாதத்தில் ஈடுபடுவோரில் ஒரு தரப்பினர் குடும்ப வன்முறை என்பது அற்பமான விடயம், அதனைப் பெரிது படுத்த தேவையில்லை என வாதிடுகின்றனர். மறு தரப்பினர் இக் குற்றச் செயலின் பாரதூரத் தன்மையை விளங்கிக் கொண்டிருப்பவர்கள் ஆவர்.

இலங்கையில் குடும்ப வன்முறை பற்றிய புள்ளி விபரங்கள் மற்றும் ஏனைய வழிகளில் வரும் தகவல்கள் குடும்ப வன்முறை அதிகளவில் நடைபெறுவதாகவும் இதில் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலானோர் பெண்கள் எனவும் கூறுகின்றனர். இலங்கையில் பெண்களில் 60 வீதாமானோர் தமது வாழ்நாளில் ஏதாவதொரு குடும்ப வன்முறைக்கு ஆட்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது. எனவே குடும்ப வன்முறை என்பது "குடும்பச் சுழலுக்குள் பெண்கள் வகிக்கும் பாத்திரம் காரணமாக குடும்பத்துக்குள்ளேயே அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்முறை அல்லது நேரடியாகவும், எதிர்மறையாகவும் அவர்கள் மீது பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் குடும்பத்துக்குள் மேற்கொள்ளப்படும் வன்முறை" ஆகும்.

இலங்கையில் குடும்பங்களில் பெண்கள் மீது மேற்கொள்ள ப்படும். வன்முறைகள் அவர்களது உயிருக்கு ஆபத்தைத் தருவதோடு நீண்டகால தீங்குகளையும் ஏற்படுத்து கின்றன என அறிக்கையிடப் பட்டுள்ளன. இந்த அறிக்கைகளின் படி பெண்களின் கரங்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. உடலில் தீக் காயங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. உடல் ஊனமாக்கப்பட்டுள்ளனர். பழிவாங்கப் பட்டுள்ளனர். இலங்கையில் சித்திரவதை வகை களுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர். நம் நாட்டில் சிறு குடும்பச் சச்சரவுகளைக்

கவனிக்கப் பல ஏற்பாடுகள் உள்ளன. பொலிஸ், இணக்க சபைகள், பிரதேச சபைகள், குடும்பத்திலுள்ள மூத்தோர், மற்றும் சமூகத் தலைவர்கள் குடும்பச் சச்சரவுகளைத் தீர்த்து வைக்க முயல்கின்றனர். இதில் பல பிரச்சினைகள் உள்ளபோதும் இவர்களின் சேவைகள் பெறுமதியானவைகளாகும். இவர்கள் சிறு சிறு சச்சரவுகளைத் தீர்த்து குடும்பத்துக்குள் வேறுபாடுகளைக் களைந்து சமரசத்தை ஏற்படுத்துகின்றனர்.

குடும்ப வன்முறைகளைத் தடுப்பதற்கு உருவாக்கப்பட்ட சட்டங்கள் கணவன், மனைவிக்கிடையிலான வன்முறைக் குற்றங் களைக் கருத்தில்க் கொள்கின்றன. எமது சமூகத்தில் குடும்பமே மிகவும் புனிதமான நிறுவனமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் புனிதமான குடும்பத்துக்குள் பெண்கள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவது ஏற்றுக்கொள்ளப் படக் கூடியதல்ல.

2005 செப்ரெம்பர் மாதத்தில் குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இச் சட்டம் நிறைவேற்றப்படும் வரை குடும்ப வன்முறை என்பது இலங்கையைப் பொறுத்தவரை கண்ணுக்குத் தெரியாத ஒன்றாகவே இருந்தது. இது சமூகத்தினால் ஏற்கப்பட்டதாகவும், அரசினால் கண்டு கொள்ளப்படாததாகவுமே இருந்து வந்தது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இலங்கை வரலாற்றில் முதன் முதலாக "குடும்ப வன்முறை" என்பது குற்றமாகவும் இக் குற்றத்திற்கெதிரான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இலங்கையில் குடும்ப வன்முறை தொடர்பான சட்டம் இரு பரிமாணங்களைக் கொண்டுள்ளது. இவற்றில்

1. குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம்.
2. குற்றவியல் கோவை 2005ம் ஆண்டு 34ம் இலக்க குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம்.

பாதிக்கப்வர்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்கு கின்றது. இச்சட்டத்தின் படி குடுமப வன்முறைக்கு ஆளான ஒருவர் நீதிமன்றத்திடமிருந்து ஒரு பாதுகாப்புப் கட்டளையைப் பெற்றுக் கொள்ள முடியும். மேற்படி சட்டத்தில் குடும்ப வன்முறை என்ற அடிப்படையில் ஒரு நபருக்கு இழைக்கக் கூடிய உடல் சார் வன்முறைகள் விபரிக்கப்பட்டுள்ளன. குற்றவியல் கோவையின் அடிப்படையில் குடும்ப வன்முறையை இழைக்கும் ஒருவருக் கெதிராக அரசு வழக்குத் தொடர முடியும்.

குடும்ப வன்முறை ஒரு குற்றமாக அங்கீகரிக்கப்பட்டி ருப்பினும் கூட பால்நிலை சார்ந்த பெண்களின் அடையாளங்கள், வகிபங்குகள் மற்றும் நடத்தைகள் அத்துடன் அவை தொடர்பான சமூக எதிர்பார்ப்புகள் காரணமாக இப் பிரச்சினைக்கு முகங்கொடுப்பது சிரமமாகவே உள்ளது. பெண்கள் எதிர் நோக்கும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைக்ள, நீதி, பாதுகாப்பு மற்றும் சமூக மயமாக்கலுக்கு வாய்ப்பும் ஆதரவின்மை பற்றி ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாகவே குடும்ப வன்முறையின் பாரதூரத் தன்மை குறைக்கப்படுகின்றது. பாதிக்கப்படும் பெண்கள் வன்முறை பற்றி முறையிடவும் உரிய நடவடிக்கை எடுக்கவும் முடியாமல் உள்ளனர்.

சில பெண்கள் தம்மீது இழைக்கப்படும் வன்முறை பற்றிய விபரங்களை தமது குடும்ப உறவினர் மற்றும் பெண்கள் நிறுவனங்கள், சமய நிறுவனங்களுக்கு வெளிப்படையாகச் சொல்லத் துணிகின்றனர். இவர்கள் இலங்கையின் நீதி முறையினால் பல்வேறு விதமாக நடத்தப்படுகின்றனர். இலங்கையின் நீதி மன்றங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பும் குற்றமிழைப் பவர்களுக்குத் தண்டனையும் வழங்குகின்றனர். உண்மையில் பெண்களை வன்முறையிலிருந்து பாதுகாத்து குடும்பங்களில் ஏற்படக்கூடிய வன்முறைச் சூழ்நிலைகளிலிருந்து தம்மைப்

பாதுகாத்துக் கொள்ளக் கூடிய வகையில் அவர்களை வலுப படுத்தும் பொறிமுறைகள் மற்றும சட்டங்கள் பற்றி நாம் கவனத்தில் கொள்வது முக்கியமானது.

## குடும்ப வன்முறைச் செயற்தடுப்புச் சட்டத்தின் பொருத்தப்பாடு

அமைதி, ஒழுங்கைப் பாதுகாப்பதற்கான கடப்பாடு என்பது சட்டங்களின் மீதான பாரிய கடப்பாடொன்றாகும். இந்நோக்கத்தை எய்தும் வகையில் வன்முறைகள் அற்ற சமூகம் ஒன்றை உருவாக்கச் சட்டங்கள் ஆவன செய்தல் வேண்டும். வன்முறைகள், அவை சமூகத்தின் எந்த மட்டத்தில் எழுவதாயிருப்பினும் அவற்றின் எதிர்மறை விளைவுகளிலிருந்து சமூகத்தைப் பாதுகாத்தலிற்கான பொறுப்பு சட்டங்களிற்கு இருக்கின்றது. வன்முறைகளை வேரோடு களைவதிலும், முளைவிட்டவற்றை இடைக்களைதலிலும் சட்டங்கள் எதிர்நோக்கக்கூடிய பாரிய சவால்கள் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் இன்று உணர்த்தப்பட்டிருக்கின்றது.

குடும்ப மட்டங்களில் நிலவுகின்ற புரிந்துணர்வுக்குறைவு அல்லது மந்தகதியிலான புரிந்துணர்வு ஆகியவற்றின் விளைவால் குடும்பங்களிலிருந்து தோன்றுகின்ற பிரச்சினைகள் வன்முறையின் ஆகக்குறைந்த படிநிலையில் இருப்பதை அவதானிக்கலாம். குடும்ப வன்முறைகளானவை அவற்றின் அடிநிலையிலிருந்து வன்முறைப்பட்டியலின் அதியுச்சங்களைத் தொடுதல் நடைபெறக் கூடாதாயின் குடும்பமட்டங்களிலான வன்முறைகளைத் தடுக்கவும், பாதுகாக்கவும் சட்டத்தால் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

அங்ஙனம் ஆக்கப்பட்ட சட்டம்தான் 2005ம் ஆண்டின் 34ம் இலக்க குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டம். சட்டத்தால் வரையறை செய்யப்பட்டபடி வீட்டுக்குள்ளே அல்லது வெளியே தனிப்பட்ட முறையில் புரியப்பட்ட தவறான செயல் அல்லது உணர்த்தி ரீதியான துஷ்பிரயோகத்திற்காக ஒருவர் பாதுகாப்புக்

கட்டளைக்காக நீதிவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்வதற்கான உரிமை சட்டத்தின் 2ம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

தகவுடைய ஒருவரால் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்று கிடைத்ததன் மேல் குடும்ப வன்முறைச்செயல் புரியப்படுவதைத் தடுப்பதற்கான அவசரத்தேவை மற்றும் துன்புற்ற ஆளின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான அவசியம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு (4(2)) உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைக்காலக் கட்டளையொன்றை (4(1)) வழங்குவதற்கு நீதிவான் தத்துவமளிக்கப்பட்டுள்ளார்.

இங்ஙனம் ஆக்கப்பட்ட இடைக்காலக் கட்டளையானது குடும்ப வன்முறைச் செயல் எதையும் புரிவதிலிருந்து பிரதிவாதியைத்தடைசெய்வதாய் அமையும் நிபந்தனைகளைக் கொண்டதாய் அமைவதோடு குறித்த விடயம் தொடர்பில் பாதுகாப்புக் கட்டளையொன்று அறுதியாக வழங்கப்படும் வரை அமுலில் இருக்கும் (5(3)).

அதன்பின் பிரதிவாதி ஏதேனும் குடும்ப வன்முறைச் செயல் புரிவதைத் தடைசெய்யும் வகையிலும், துன்புற்ற ஆளின் பாதுகாப்பையும் நலனையும் உறுதிப்படுத்தல் அவசியமாயுள்ள சூழ்நிலையிலும் நீதிமன்றத்தால் 12மாதங்களை விஞ்சாத காலப்பகுதிக்கு அமுலில் இருக்கக்கூடிய வகையிலும் பாதுகாப்புக் கட்டளை ஒன்றை நீதிமன்றம் ஆக்கமுடியும் (பிரிவு 10)

இவ் இடைக்காலக் கட்டளையாயினும் சரி, பாதுகாப்புக் கட்டளையாயினும் சரி சம்பந்தப்பட்டவர்கள் சேர்ந்து வாழும் இடம், துன்புற்ற ஆளின் வதிவிடம் தொழில், பாடசாலை அல்லது துன்புற்ற ஆள் தொடர்புடைய இடம் மற்றும் ஆதனம் ஆகியவற்றில்

பிரதிவாதி நுழைவதையும், துன்புற்ற ஆளைத் தொந்தரவு செய்வதையும் தடைசெய்யப்படுவதோடு (பிரவு 11) அவசியமான பொழுதுகளில் துன்புற்ற ஆளின் பாதுகாப்பு, நலன் கருதி பொருத்தமான குறை நிரப்புக்கட்டளைகளை ஆக்குவதற்கும் நீதிமன்றம் சக்தி பெற்றுள்ளது.

குடும்பங்களிலெழக்கூடிய வன்முறைகளினால் மனிதாபிமானமற்ற ஒடுக்கல்களை எவரும் அனுபவிப்பதை அனுமதிக்கக் கூடாது என்பதற்காக அத்தகைய பாதிப்புக்களிலிருந்து துன்புற்ற ஆளை விடுவித்து நிவாரணம் அளிக்கவென சட்டத்தால் செய்யப்பட்டுள்ள இவ்வேற்பாடுகள் வரவேற்கத்தக்கதேயாயினும் இந்தச் சட்டம் செயற்படப் போகின்ற இயங்குதளம் சார்ந்து சில சட்டப்பிரச்சனைகள் சட்டவாளர்களால் முன்வைக்கப்படுகின்றது. உலகில் ஒவ்வொரு நாட்டினதும் அடிப்படைக் கட்டமைப்பானது ஒரே மாதிரியாக இருக்கும் என்ற நினைப்பு சாத்தியமில்லாக் கற்பனையே அந்தந்து நாட்டின் கலை, கலாசார, பொருளாதார, பண்பாடு மற்றும் இன்னோரன்ன விழுமியங்களுக்கமைவாகவே அதன் கட்டமைப்பு அமைக்கப்பட்டிருக்கும், அந்தந்த நாட்டின் இயல்புகளுக்கும், தேவைகளுக்கும் அமையவே அரசின் பணிகளும் வகுக்கப்பட்டடிருக்கும் இந்தவகையில் மேலைத்தேய நாடுகளின் அரசியல் அமைப்பிலும் கட்டுமானத்திலிருந்தும் கீழைத்தேய நாடுகள் கணிசமான கட்டமைப்பு வேறுபாட்டைக் கொண்டிருக்கின்றன.

நாடுகளின் அரசியல் கட்டமைப்புக்கும் குடும்பவன்முறைத் தடுப்புச்சட்டத்திற்கும் என்ன சம்பந்தம் என்ற கேள்வி எழுகின்றது. வேறேதேனும் ஒரு வன்முறையைத் தடுப்பதற்கென ஆக்கப்பட்ட சட்டமொன்றின் விடயத்தில் நாட்டின் கட்டமைப்பை பின்னணியில் வைத்து ஆராய வேண்டிய தேவை பெருமளவில் எழாது. ஆனால் குடும்ப வன்முறைத் தடுப்புச்சட்டத்தைப் புறந்

தள்ளி விட்டு கண்மூடித்தனமாக அச்சட்டத்தை அமுல்ப்படுத்த முயல்தலினால் பல பாரதூரமான சமூகப்பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

குடும்ப என்பதற்கு நாடுகள் வழங்கியுள்ள அங்கீகாரம் எத்தகையது என்பது அடுத்து ஆராயவேண்டிய பிரச்சினை. சமூகத்தின் அடிப்படை அலகாக குடும்பம் பொதுவில் ஏற்றுக்கொள்ளப்படினும் ஒரு நாட்டின் இயல்புகளைப் பொறுத்து வேறுபடுகின்றது.

இலங்கையைப் பொறுத்த வரையில் சமூக அலகென்ற அடிப் படையில் குடும்பங்களைப் பாதுகாப்பதற்கான கடப்பாடானது 1978ம் ஆண்டு அரசியலமைப்பின் அரசகொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகள் உறுப்புரை 27 (12)ன் கண் அரசின் மீது சுமத்தப்பட்டுள்ளது. எனவே குடும்பங்கள், சிதைவடையாமல் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு இலங்கை அரசிற்கான வழிப்படுத்தலாக உள்ளது. வழிகாட்டிக் கொள்கையானது சட்டக்கடப்பாடல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

குடும்ப வன்முறைத் தடுப்புச்சட்டத்தின் மூலமாக குடும்பங்களில் எழக்கூடிய வன்முறைகளைத் தடுக்கும் கருத்தியல் நோக்கில் குடும்பங்கள் சீர்குலைக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு தற்போது மேலெழுந்து வருகின்றது.

குடும்பப் பிரச்சினைகள் சந்திக்க வருகின்றபொழுது குடும்பத்தின் அத்திவாரம் ஆட்டம் கண்டுவிட்டதாய் அர்த்தம் கொள்ளப்படுகின்றது. கீழைத்தேய கலாசாரத்தை மிக இறுக்கமாக ஏற்றக்கொண்ட இலங்கை மக்களின் பார்வையில் குடும்பப் பிரச்சினைகளிற்கென நீதிமன்றின் படிகளில் ஏறுதல் என்பதும் தங்கள் உறவுகளிற்கெதிராகச் சட்டத்தின் செயற்பாட்டை

தூண்டிவிடுதல் என்பதுவும் அருவருக்கத்தக்க செயலென எடை போடப்படுதோடு சமூக அலகு ஒன்று என்ற அடிப்படையில் அக்குடும்பத்தில் வழங்கப்பட்டு வந்த கௌரவமும் இழக்கப் படுகிறது.

ஆனாலும் கூட விவாகரத்துக் கோரி மாவட்டநீதிமன்றங் களிற்கு வருகின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பார்க்கிற பொழுதும், வாழ்க்கைத் துணைக்கு எதிராக, மற்றைய துணை துணிந்து சாட்சிக்கூண்டில் ஏறுகின்ற நிகழ்வைப் பார்க்கின்ற பொழுதும் குடும்பப் பிணக்குகள் அம்பலப்படுத்தப்படல் கேவலம் என்பதாக எங்கள் மக்களின் மனங்களிலிருந்து அடிப்படைச் சிந்தனை பாரிய ஆட்டம் கண்டிருப்பதை உணர முடிகிறது.

வன்முறைகள் குடும்பங்களுக்குள் வரையறையற்று ஊடுரு வியுள்ள இன்றைய காலத்தில் அவை வெளியுலகப் பார்வையி லிருந்து மறைக்கப்படல் என்பது படுமுட்டாள்த்தனமான சிந்தனை யாகவே இருக்கும். குடும்ப வன்முறைகள் அம்பலப்படுத்தப்பட்டு உரியவர் தண்டிக்கப்பட்டுவதும் பாதிக்கப்பட்டவர் நிரந்தர தீர்வு பெறுவதும் அவசியம் செய்யப்பட வேண்டிய செயலாகும்.

ஆனால் குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டமானது தவறிழைத்தவரை தண்டிப்பதில் செவ்வனே செயற்பட்டு வருகின்றதாயினும் துன்புற்ற ஆளிற்குநிரந்தரத் தீர்வு வழங்கல் நிடையத்தில் சில வடயங்களைக் கவனிக்கத் தவறி இருக்கிறது என்று தான் கூறவேண்டும்.

உதாரணமாக கணவனின் துன்புறுத்தல்களால் பாதிக்கப் பட்ட பெண்ணொருவருக்கு பாதுகாப்புக் கட்ளை மூலம் கணவனின் தொந்தரவிலிருந்தும், நச்சரிப்பிலிருந்தும் வேறுபல வழிகளில் ஏற்படக்கூடிய இடர்பாடுகளில் இருந்தும் இச்சட்டம்

விடுதலை அளிக்கவல்லதாய் உள்ளது. ஆனால் கணவனின் தொடர்பறுக்கப்பட்ட பெண் சுயமாக தன்னைப் பராமரிக்கும் இயலுமையைக் கொண்டிராதவிடத்து அவளின் எஞ்சிய வாழ் காலத்திற்கு யாது வழி என்ற விடயத்தில் இச்சட்டம் பதிலற்றுக் கிடக்கின்றது.

மேலைத்தேய நாடுகளில் இங்ஙனம் கட்டறுக்கப்பட்ட குடும்ப அங்கத்தவர்களின் நலன் கருதி சமூகம் பாதுகாப்பு (Social security) எனும் விசேட திட்டம் உள்ளது. இதன்படி முறிந்த குடும்பங்களிலுள்ள தேவைமிகுந்த அங்கத்தவர்களுக்கு அரசு உதவிப்பணம் வழங்குவதோடு வாழ்வதற்கான நம்பிக்கையும் உத்தரவாதத்தையும் தருகின்றது.

இலங்கையைப் பொறுத்த வரை சமூகநல அரசு என்ற தன்மையை பொருளாதார நெருக்கடி வளப்பற்றாக்குறை என்பதன் பிரதான காரணங்கள் எனவே இத்தகைய முறிந்த குடும்பங்கள் தொடர்பில் அவற்றின் பாதுகாப்பிற்கென அரசால் நிதியுதவி முதலில் காத்திரமான பங்களிப்பை செய்ய முடியாது என்பது நிதர்சனம். பொருளாதார நெருக்கடி, வளப்பற்றாக்குறை என்ற மன்னிப்புக்களை முன்னிறுத்தித்தான் பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் எமது அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகிறது. அத்தியாயம் 3ல் அடிப்படைக் குடியியல் அரசியல் உரிமைகள் மாத்திரமே உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளன.

பிணக்குகள் எழுந்த குடும்பங்கள் மீள் இணைக்கப்படும் வரையில் அல்லது மீள் இணைதலிற்கான சந்தர்ப்பங்கள் இல்லாது போகும் தறுவாயில் அவர்களின் வாழ்காலத்திற்கென சமூக பாதுகாப்பு முதலில் எத்தகைய உத்தரவாதத்தையும் வழங்க முடியாத நாட்டின் சட்டத்தால் பிணக்குகளை முறைப்பாடு செய்தலிற்கும், தவறிழைத்தவரை தண்டனைக்குள்ளாக்குவதற்கும்

ஏற்பாடுகள் இருப்பினும் அவற்றால் யாதொரு பயனும் விளையப் போவதில்லை.

குடும்பவன்முறை செயல் தடுப்புச்சட்டத்தைப் பொறுத் தவரை குடும்பவன்முறையை முறைப்பாடு செய்வதற்கும், துன்புற்ற ஆளை தொடர் துன்புறுத்தலிலிருந்து விடுவிப்பதற்கும் தான் வழிசெய்யப்பட்டிருக்கின்றது. சட்டத்தின் *12(1)(ஊ)*ன் கீழ் எவரேனுமாளுக்கு ஆதாரமளிப்பதற்கு பிரதிவாதிக்கு கடமையொன்றுள்ளவிடத்து அத்தகைய ஆளுக்கு அவசர பண உதவி வழங்குமாறு பிரதிவாதி கட்டளையிடப்படலாம் எனக் கூறப்படினும் பணத்தொகையின் அளவு எத்தகைய காலத்திற்கு முதலில் கேள்விகளிற்கு தெளிவான பதிலில்லை.

குடும்பவன்முறைச் செயல் தடுப்புச்சட்டத்தின் கீழ் கணவனின் கொடுமைக்கெதிராக முறைப்பாடு செய்த குடும்பப் பெண்ணொருவர் கணவனின் தலையீடின்றி சட்டத்தால் பிரித்து வைக்கப்படும் குறிப்பிட்டளவு காலப்பகுதியில் (உதாரணமாக பாதுகாப்புக் கட்டளை அமுலில் உள்ள காலம்) அப்பெண் மற்றும் குழந்தைகள் முதலிய தங்கி வாழ்வோரின் அடிப்படைத் தேவைகளிற்கான வழி என்ன என்பதற்கு இச்சட்டத்தில் தெளிவான பதிலில்லை பிரிவு*11(1)*ன் கீழ் திருமணவீட்டைப் பரிமாற்றத்திற்கு உட்படுத்தல் மட்டும் தவிர்க்கப்பட்டுள்ளது. வாழ்க்கைத் துணையொருவரை மற்றைய வாழ்க்கைத் துணைக்கெதிரான தகுதி வாய்ந்த சாட்சியாக ஏற்றுக்கொண்ட இச்சட்டம் (பிரிவு*16*) இச்செயலால் விளையக்கூடிய பிரிவு மற்றும் அது சார்ந்த விளைவுகள் பற்றி சிந்திக்கத் தவறிவிட்டதெனலாம்.ஸ

குடும்ப வன்முறையொன்றிற்கென முறையீடு செய்த நபரையும் எதிராளியையும் மீள் இணைப்பதில் சட்டம் எவ்வளவு பங்களிப்பை நல்கப்போகின்றது என்பதும் கேள்விக்குறியே.

இச்சட்டத்தின் பிரிவு 5(2)(அ)ன் கீழ் திறந்தவர்க்கு ஆலொசனை யளித்தல் அவசியமாகவுள்ளவிடத்து அவ்வண்ணம் செய்யும்படி சமூகசேவகர் ஒருவருக்கு அல்லது குடும்ப ஆலோசகர் ஒருவருக்கு நீதிமன்றம் கட்டளையிட முடியும் எனக் கூறப்பட்டுள்ள போதும் அவ்வாலோசனை எத்தகையது என்பது பற்றி தெளிவாகக் கூறப்படாமை குறைபாடொன்றே.

குடும்ப வன்முறை காரணமாக தொடர்பறுக்கப்பட்ட குடும்பங்கள் ஒரு கட்டத்தில் மீள் இணையும் போது பாதிக்கப்பட்டவரின் வாழ்வாதாரம் என்ற கேள்வி ஒருவழியாய் முடிவுக்கு வருகிறது. மீள் இணைவிற்கான சாத்தியக் கூறுகள் தென்படாத குடும்பங்களை பொறுத்தளவில் வழக்குத்தாக்கல் செய்யப்படின் வழக்கு முடிவில் பராமரிப்புத் தொகைகல் கட்டளை வழங்கப்படும் வரைக்கும் வாழ்வதற்கு என்ன வழி என்ற நச்சரிப்பு தொடர்ந்தபடி இருக்கும் விவாகரத்து வழக்கு தொடர்வதிலும், அதற்கான காரணங்களைச் சரியாக முன்வைப்பதிலும் இறுதியாக சாதகமான தீர்ப்பை நீதிமன்றத்தில் பெறுவதிலும் பல சட்டத்தடைகள் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

எதிர்கால விளைவுகள் அனைத்தையும் உள்வாங்கி அவற்றைத் தவிர்ப்பதற்காக சூழ்நிலைகளை முற்கூட்டியே ஏற்பாடு செய்தல் என்ற விடயம் சட்டவாக்குனர்களைப் பொறுத்தளவில் பெரிய சவாலாக இருப்பதோடு நடைமுறையில் அசாத்தியமானதும் கூட. இலங்கை போன்ற நாடுகள் சட்டங்களால சிபாரிசு செய்யப்படும் அத்தகைய தீர்வுகளை வழங்குவதற்கான இயலுமை யிலுமில்லை.

குடும்பவன்முறை செயல் தடுப்பு சட்டத்தின் கீழ் சமூகப் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்ற எடுகோளின் பேரில் ஆராய்ந்து பார்த்தாலும் உத்தகைய சமூகப்பாதுகாப்பை வழங்க்

கூடிய பொருளாதார இயலுமையை இலங்கை அரசுக்கு உண்டா என்பது சந்தேகமே.

எனவே ஒரு பக்கம் பிரச்சினைகளோடு போட்டி போட்டு சட்டங்கள் தீர்விற்காக வழியில் வளர வேண்டும் என்பதோடு மறுபுறம் அரசுகள் சட்டத்தின் சிபார்சுகளை நிறைவேற்றும் இயலுமையை துரிதமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான் இன்றைய தேவையாயுள்ளது.







**பெண்கள் வன்முறைகள் தொடர்பான ஆவணங்கள்**

- பெண்களுக்கு எதிரான சகலவித பாரபட்சங்களையும் ஒழித்தல் தொடர்பான பிரகடனம்
- சீடோ பொதுவான சிபார்சுகள் (12)
- நான்காவது பெண்கள் உலக மாநாட்டு அறிக்கை.
- நான்காவது ஜெனீவா மரபொழுங்கு
- ஐ.நா பாதுகாப்பு சபைத் தீர்மானம் 1325 (2000)

# மகப்பேற்று உரிமைகள்

ஒவ்வோர் வருடமும் உலகெங்கும் பல்லாயிரம் பெண்கள் மகப்பேற்று காரணமாக இறப்பதாக தரவுகள் காட்டுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை வளர்முக நாடுகளிடையே இடம்



பெறுகின்றன. எழுபதாயிரம் பெண்கள் கருக்கலைப்பு காரணமாகவும், 7 மல்லியன் குழந்தைகள் தாய்மாரின் உடல் அசௌகர்யம் காரணமாகவும் இறப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. *1994*இல் கைரோவில் இடம் பெற்ற உலக குடித்தொகை மாநாடு, *1995*இல் சீனாவில் நடைபெற்ற ஐ.நா வின் நான்காவது பெண்கள் மாநாடு இவற்றின் விளைவாக பெண்கள் மகப்பேற்று உரிமைகள் ஏனைய மனித உரிமைகள் போல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இவை தொடர்பாக பல சர்வதேச உடன் படிக்கைகளும் செயற்பட்டன.

- வாழ்தல், பாதுகாப்பிற்கான உரிமை
- பாலியல் பாரபட்சங்களிலிருந்து விடுபடும் உரிமை
- சுகாதாரம், மகப்பேற்று சுகாதாரம், குடும்ப திட்டம் தொடர்பான உரிமைகள்
- திருமணம் புரிந்து குடும்பமாக வாழும் உரிமை.
- பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு இடையிலான கால இடைவெளி
- சித்திரவதை மற்றும் அதிகாரமாக நடத்துதல், தண்டனை போன்றவற்றிலிருந்து விடுபடும் உரிமை.
- பாலியல் வன்முறை பாரபட்சத்திலிருந்து விடுபடும் உரிமை.

மகப்பேற்று உரிமையானது பெண்களுக்குரிய ஓர் சிக்கலான பிரச்சினைகளுக்குரிய விடயமாக இருப்பதோடு இது உலகளாவிய பிரச்சாரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

### இவ்வுரிமை தொடர்பான ஆவணங்கள்

- உலகளாவிய மனித உரிமைகள் சாசனம். உறுப்புரை (2,3,5,16,25)
- குடிசார் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனம். உறுப்புரை (2,6,7,9,17,23)
- சிறுவர் உரிமை தொடர்பான மரபொழுங்கு உறுப்புரை (6,16,19,24,34,37)
- சகலவிதமான பாரபட்சங்களை ஒழித்தல் தொடர்பான சர்வதேச மரபொழுங்கு உறுப்புரை (5)
- குடித்தொகை மற்றும் அபிவிருத்திதிட்ட செயற்பாடுகள் தொடர்பான சர்வதேச மரபொழுங்கு
- நான்காவது பெண்கள் உலக மாநாடு செயற்றிட்டம். பந்திகள்.(89-130,259-285)
- சீடோ பொதுச் சிபார்சுகள்
- சீடோ சிபார்சுகள். இல(21)

### சூழல் தொடர்பான உரிமைகள்:

*மனித உரிமைகளை சூழல் தொடர்பான உரிமைகளோடு இணைதல்*

ஓர் தனிநபரது சுகாதார நிலமைகளிலிருந்து பிரித்துவிட முடியாது. ஓர் சுகாதாரமான சூழல் நிலமைகள் மனிதன் சுகமாக வாழ்வதற்கு அவசியமாகும். பெண்கள் குழந்தைகளைப் பெறுகின்றனர். அவர்கள் சுவாசிக்கும் காற்று, குடிக்கும் நீர்,

உண்ணும் உணவு, அவர்களது மகப்பேற்று உறுப்புகட்கு பாதிப்பை ஏற்படுத்தாதவாறு அமைய வேண்டும்.

பெஜ்ஜிங் மாநாட்டு பிரகடனங்கள் சூழல் நிலமைகளில் காணப்படும் சுகாதாரப் பாதிப்புக்கள் பெண்களைப் பாதிக்காத வாறு சிறப்பான கொள்கைகள வகுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. வீட்டிலும், வேலைத்தளங்களிலும் வேலை செய்யும் பெண்களுக்கும் பிரசவ தாய்மார்கட்கும் அவர்கள் வாழும் சூழல் சுகாதாரமான முறையில் அமைவதற்கு ஏற்ற வழி வகைகள் செய்யப்படவேண்டும்.

## மாற்றுத்தேவைகளையுடைய பெண்கள்



மாற்றுத்தேவைகளையுடைய பெண்கள்தமது உரிமைகளை வலியுறுத்துகின்றனர். 1967ஜூன் மாதம் 82 நாடுகளிலிருந்து 614 ஊனமுற்ற பெண்கள் பங்கு பற்றிய சர்வதேச தலைமைத்துவமாநாட்டில் பெண்கள், இளம் பராயத்தவர் ஊனமுற்றவர்களாக காணப்படு மிடத்து அவர்களை எவ்வாறு வலுப்படுத்தி ஊக்கப்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டது. மாற்றுத் தேவைகளையுடைய பெண்கள் சகல மாநாடுகளிலும் பங்கேற்ப தோடு கொள்கை, தீர்மானங்கள் எடுப்பதிலும் அவர்கள் பங்கேற்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. இவர்களை குடும்பத்த வர்கள், தன்னார் பாதுகாவலர்கள், நிறுவன அதிகாரிகள், பொலிஸ், நண்பர்கள் கேலிசெய்தல், அடித்தல், பாலியல் பலாத்காரம் செய்தல், பாரபட்சம் காட்டுதல் என்பவற்றிலிருந்தும்,

கல்வி, சுகாதார வசதிகள் ஆகியவற்றிலிருந்தும் அவர்கள் உரிமை மீறுதல் தடுக்கப்படுதல் வேண்டும்.

கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதார வசதிகளில் இன்றைக்கு முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும். அவர்கள் கல்வி கற்றும் நிறுவனங்களில் அவர்கள் தேவைகட்கேற்ற முறையில் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமை அவர்கட்குண்டு. மாற்றுத்தேவையுடைய பெண்கள் தமது பாலியல் உரிமைகள் தொடர்பாக கலந்துரையாடக்கூடியஉரிமைகளும் அவர்கட்குண்டு. ஊடகங்களில் மாற்றுத்தேவையுடையோர் விமர்சிக்கப்படுதல் கடைசிப் பொருளாக பயன்படுத்தப்படல் அவர்கள் உரிமைகளை மீறும் செயலாகும். மேலும் பொது போக்குவரத்துச் சேவைகளிலும் பெண்களுக்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்படுதல் அவசியம். அவ்வுரிமைகள் யாவும் பெண்கள் தமது சிறப்பான உரிமைகளாக பெற்றுக்கொள்வதற்கு சமூகத்தின் பூரண ஒத்துழைபபும் அவசியமாகும்.



# தேசிய பிரச்சனையாக வளர்ந்து வரும் வன்புணர்வு சம்பவங்கள்

இரண்டாயிரமாம் ஆண்டின் அபிவிருத்தி இலக்குகள் நிறைவடையும் 2015ஆம் ஆண்டளவில் சுகாதார மட்டத்தில் மேலதிக முன்னேற்றத்தை அடைவதற்காக பல அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகள் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரும் காலகட்டத்தில் எமது நாட்டில் கருக்கலைப்பு, இளவயது கர்ப்பம், சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கள் வன்புனர்வு என நடைபெறும் சம்பவங்கள் நீண்டு கொண்டே செல்கின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்திருப்பது போல இதிலாவது முதலிடத்தை பெற்றுவிட முயற்சிக்கிறோமோ என எண்ணத்தோன்றுகின்றது. ஐ.நா பாதுகாப்பு சபையின் 1325 தீர்மானத்தின் பிரகாரம் போர் நடக்கும் காலங்களிலும் போர் நடைபெற்று முடிந்த பின்னய கால கட்டங்களிலும் பெண்கள், சிறுவர்களுக்கு தகுந்த பாதுகாப்ப ளித்தல் வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. இப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு அப்பால் போர் நடந்து முடிந்த பிரதேசங்களில் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் இப்பாதுகாப்பு சரியாக கிடைக்கவில்லை என்பதற்கு நாளாந்தம் இடம் பெற்று வரும் துஷ்பிரயோக சம்பவங்கள் எடுத்துக்காட்டாக அமைகின்றது. சுமார் 20,000 சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டிருப்பதாக தரவுகள் காட்டுகின்றன. சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கள் வன்புணவு என்பன சாதாரண நிகழ்வுகளாக எமது சமூகத்தில் பேசப்பட்டு வருவது துன்பகரமானதே. சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தொலைக்காட்சி நாடகங்களின் தாக்கத்தை காரணமாக காட்டியுள்ளார். ஆயினும் பெண்கள் தான் தொலைக்காட்சி நாடகங்களை தொடர்ந்து பார்க்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டிற்கு அப்பால் இந்த

நாடகங்களை பார்க்காத ஆண்கள் இதனால் எப்படி பாதிக்கப்படு கின்றார்கள் என்ற ஓர் கேள்வியும் எழுவ நியாயமானதே.

சம்பவங்களுக்கு காரணங்களை தேடி அலையாது சம்பவங்களுக்கு காரணமானவர்கட்கு சரியான தண்டனைகளை துரிதப்படுத்துவதற்கான முயற்சிகளை எப்படி மேற்கொள்ளலாம் என்பதை கவனத்தில் கொள்வது அவசியம். பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா அவடகள் தெரிவித்திருப்பது போல சட்டங்கள், தண்டனைகள் கடினமாக்கப்படவேண்டும் என்பது வரவேற்கத்தக்கதே. அதற்கான நடவடிக்கைகளை மகளிர் அமைச்சு ஆரம்பித்திருப்பதும் வரவேற்கத்தக்கதே. மகளிர் அமைப்புக்களின் நடவடிக்கைகள் பாலியல் வன்முறைகெதிரான குழு, மகளிர்க்கான உளவள ஆலோசனைகள் யாவுமே பெண்களை மட்டுமே இலக்காக கொண்டு செயற்படுவதன் காரணத்தினால், ஆண்கள் இவை எல்லாமே தமக்கு எதிரானவை நாம் நாமாகவே இருப்போம் என்ற இறுமாப்பில் காரியங்களை நகர்த்துகின்றனர். பெண்கள் இன்று வல்லமை பொருந்திய ஆளுமையுடையவர்களாக தம்மை பாதுகாக்கும் தைரியமுடையவர்களாக வெளிவந்து கொண்டி ருக்கும் நிலையில், அவர்களை இலகுவாக தம்வசப்படுத்தமுடியாத நிலையில் இன்று அப்பாவி பெண்கள்,பால்குடி மாறாத 3வயது,4வயது குழந்தைகளை தமது காமப்பசிக்கு இலக்காக்கும் காமுகர்களை எமது சமூகம் உள்வாங்கியிருக்கின்றதே! அதற்கு நாம் என்ன பதில் கூறப்போகின்றோம். கொழும்புத்துறையில் மிக அண்மையில் நான்கு வயதே நிரம்பிய சிறுமியை 40 வயது காமுகன் வன்புணர்விற்கு உட்படுத்தியது பெண்களைப் பெற்ற தாயுள்ளங்களை கொதிப்படைய செய்துள்ளது.

அரசியல் வாதிகளோ இன்று படையணிகள் பின்தொடர உச்ச பாதுகாப்பில் வலம் வருகின்றனர். ஆனால் புள்ளியிட்டு அவர்களை அரியாசனத்திற்கு ஏற்றிய பெண்கள் தமது குடும்பத்தில்

சிறுமியரையும் தம்மையும் பாதுகாக்க முடியாது தத்தளிக்கின்றனர். ஓர் சமூகத்தில் பெண்களும் சிறுவரும் ஆரோக்கியமாக வாழும் போதே சமூகம் பூரணப்படுத்தப்பட்ட சமூகம் என நாம் கூறமுடியும்.
போரின் பின்னரான மீள்குடியேற்றம் நல்லிணக்கம் என்பன பெண்களையும் சிறுவரையும் ஒன்றிணைத்த செயலாக்கமாகவே அமையவேண்டும். பாதுகாப்பற்ற ஓர் சமூக அமைப்பை மீள் உருவாக்கம் செய்வதில் மீண்டும் மீண்டும் பல பிரச்சிரனைகளை உள்வாங்க வேண்டிய சந்தர்ப்பங்களே அதிகம். பத்திரிகைகளில் வெளிவரும் பாலியல் வன்புணர்வு குற்றங்களை தினமும் பார்க்கும் போது இவை செய்திகளாக மட்டும் பார்க்காது ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகள் பற்றி அச்சம் கொள்ள வேண்டிய நிலையே ஏற்படுகின்றது. பெண் பிள்ளைகட்கு பெற்றோரே பாதுகாப்பு வழங்க வேண்டிய நிலையில் அவர்களது ஏனைய செயற்பாடுகள் கேள்விக் குறியாக, பெண்பிள்ளைகள் தனித்து வீட்டில் கூட விட்டு விட்டு வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பாலியல் குற்றங்கட்கு மரண தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதற்கு அப்பால் குற்றச் செயல்களை விரைவாக ஆராய்ந்து அதற்குரிய நீதியான தண்டனை வழங்கினாலே பெரும்பாலான குற்றங்கள் குறைவதற்கு வாய்ப்புண்டு காவல் நிலையங்களில் உருவாக்கப்பட்டிருக்கும் பெண் பொலிஸ் பிரிவினர் கூட உசார்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுக்கு உடனுக்குடன் சென்று விசாரிக்கக் கூடிய வகையில் போக்குவரத்து மற்றும் ஏனைய வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்.

தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்களை சரியாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் பாலியல் குற்றங்களில் ஓரளவாவது குறைப்பதற்கு முடியும். பெண்கள் சமூகத்தில் தம்மை ஆளுமை மிக்கவர்களாகவும், தன்னம்பிக்கை மிக்கவர்களாகவும் உருவாக்கிக் கொள்வதன் மூலம் தம்மையும், தமது சந்ததியினரையும் இவ்வாறான துன்பகரமான சம்பங்கள் இடம்பெறாமல் காப்பாற்ற முடியும். சமூகம் சீரழிகின்றது என்று கூறும் போது சமூகத்தில் நாமும் ஒருவர் என்பதை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

# அரசியலில் பெண்கள் பங்கேற்றல்

சிறுபான்மையினரின் விசேட தனித்துவங்கட்கு அப்பால் பெண்கள் மேலும் ஓர் புறம்தள்ளப்பட்டவர்களாக எவ்வித அதிகாரங்களும் அற்றவர்களாக வாழ்தல் என்பது தற்கால சூழ்நிலையில் ஏற்றுக்கொள்ளப்படமுடியாத விடயமாகும்.




பெண்கள் தமது உரிமைகளை உத்தரவாதப்படுத்திக் கொள்வதற்கு அதிகாரங்களை மையப்படுத்திய அரசியல் நோக்கு தேவையாக உள்ளது. பெண்கள் தமக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் அரசியல்,மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுப்பதிலும்,தமது பங்களிப்பை வழங்குவதற்கும் உரித்தானவை மட்டுமன்றி, கல்வி, தொழில்வாய்ப்பு, வீட்டுவசதி,காணிஉரிமை போன்ற சமூக அபிவிருத்தி தொடர்பான விடயங்களிற்காக வழங்கப்படும் வளப்பகிர்வு போன்ற விடயங்களில் அரசாங்கம் தீர்மானம் எடுக்கப்படும்போது பெண்கள் பங்குபற்றுதலிருந்து புறம்தள்ளப்படும் போது, பாரபட்சம் என்பதனை தவிர்த்துகொள்ளலோ, தடுத்துக் கொள்ளலோ பெண்களுக்கு இயலாமற் போய் விடுகின்றது. ஆகவே அரசியலில் பெண்கள் பங்கேற்றலை தேசிய ரீதியிலும், பிரதேச ரிதீயாகவும் மேம்படுத்திக் கொள்ளும் நடவடிக்கைகளை கட்சிகள் உறுதிசெய்து கொள்வது அவசியம்.

இலங்கை அரசியலிலும் பொதுவிடயங்களிலும் பெண்களின் பங்குபற்றுகை என்ற விடயமானது தற்போது மிக ஆழமாக கலந்துரையாடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டும்

வரும் விடயமாக உருவாகியுள்ளது. இலங்கையின் குடித் தொகையில் 52% மானவர்கள் பெண்களாக இருந்தபோதிலும் அவர்கள் முழுப்பிரஜைகளாக உரிமைகளையும், சுதந்திரத்தையும் அனுபவிப்பதில்லை. ஐ.நா.பெண்கள் முன்னேற்றம் அடைந்திருப்பதாக கூறியிருந்தபோதிலும், இது ஓர் மெதுவான நகர்வாகவே உள்ளது. அவர்கள் இன்றும் அரசியலில் உள்ளடக்கப்படாதவர்களாகவும், ஓரங்கட்டப்பட்டவர்களாகவுமே உள்ளனர்.

அரசியல் மூலமே ஓர் சமூகம் தமது கட்டமைப்பு, தேவைகளை வலுப்படுத்தும் கூட்டுத்தீர்மானங்களை எடுக்கமுடியும் ஆயினும் அரசியலை சரியாக புரிந்து கொள்வதில் பெண்ணிய அரசியற் கோட்பாட்டாளர்கள் சில வரையறைகளை இனங்காட்டியுள்ளனர். மேற்குலக அரசியலில் சித்தாந்தங்களில் பரிமானம் பெற்று வளர்ந்த அரசியல் ஆண்களுக்கே சொந்தமானது என தாமாகவே தீர்மானித்துக்கொண்டனர் என சுட்டிக் காட்டுகின்றனர். இந்நிலைப்பாடு அப்பட்டமான உண்மையாக நிரூபிக்கப்பட்டு வருவதை இலங்கை அரசியலில் அரசியல் கட்சிகளின் மேலாதிக்கம் என்ற நிலைப்பாடுகளை அவதானிக்கும் போது தெளிவாகின்றது. தென்ஆசியாவில் கடந்த இரண்டு தசாப்தங்கட்கு மேலாக அரச துறையல்லாத மட்டங்களிலும் அரசியலில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான முயற்சிகள் பெண்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஐ.நாவின் **1325** விதப்புரைக்கமைய பெண்கள் உயர்மட்ட அரசபதவிகளில் இடம் பெற்றுக்கொள்ளுதல் மேற்குலக நாடுகளில் விரைவாக பின்பற்றப்பட்டு வருகின்றன ஓர் நற்செய்தியாகும் ஐ.நாவின் உயர்மட்ட குழுக்களிலும் உயர்ஸ்தானிகராலயங்களிலும் பெண்கள் உயர் பதவிகளை பிரதிநிதிப்படுத்துதலில் முன்நிற்கின்றனர். இந்தியாவில்கூட உள்ளூர் நிறுவனங்கள் அனைத்திலும் பெண்களுக்கான இடஒதுக்கீடுகள் மூன்றிலொரு பங்காக அமைவதற்குரிய சாதகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எப்படி இருந்தபோதிலும் பெண்களின் அரசியலில் பங்குபற்றுதல் என்பது உலகலாவிய ரீதியில் குறைவானதாகவே உள்ளது. அரசியலில் அதிகாரம் எங்கு அதிகமாக இருக்கின்றதோ அங்கொல்லாம் பெண்களுக்கு இடமில்லை பெண்களின் அரசியல் பங்குகற்றுகை அடிமட்டத்தில் செயற்படுவதாக அதிகரித்திருத்தாலும் அவர்கள் அரசியல் கட்சிகளில் தலைவர்கள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்களின் மத்தியில் குறைந்த பிரதிநிதித்துவத்தையே பெற்றுள்ளனர். ஆரசியல்வாதிகளின் அடிவருடிகளாக, அவர்களின் வாக்குவங்கியாகவே பெண்கள் இன்றும் செயற்படும் துர்பாக்கிய நிலையில் மாற்றம் வேண்டும் பெண்கள் நேரடியாக அரசியலில் களமிறங்கும் செயற்பாடுகளில் பல பின்னடைவுகள், தடைகள் இருந்தபோதிலும் அவற்றை தாங்ககூடிய, எதிர்க்கக்கூடிய சமூகபலத்தை பெண்கள் கட்டியெழுப்புதல் அவசியமாகிறது.

அரசியலில் ஈடுபடும் பெண்கள் பல வன்முறையான சவால்களை எதிர்கொள்ள நேரிடும் என்ற வாதமும் உண்டு. இன்று வன்முறைகளை எதிர்த்துப்போராட சகல முயற்சிகளையும் எடுத்துவரும் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களோடுமட்டும் இதனை மட்டுப்படுத்திய செயலாக கருதாது அரசியல் வன்முறைகளையும் எதிர்க்கும் உத்வேகத்தைப் பெறுவது இன்றைய தேவையாகும். அரசியலில் வன்முறை பால்நிலை சார்புடையதாக இல்லாது இருக்கலாம். ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானதாகக்கூட இருக்கலாம் ஆனால் பெண்கள் மட்டும் அதனை எதிர்கொள்வதனை ஏன் சிரமமாக பார்க்கிறார்கள். இலங்கைப் பெண்கள் ஆண்களைவிட மாறுபட்ட முறையில் கட்சி அரசியல் வன்முறையை எதிர்கொள்வதே காரணம். இதனால் துடிப்பான ஓர் அரசியலை பெண்களால் எதிர்கொள்ள முடிவதில்லை.

இலங்கையின் அரசியலில் வன்முறை அதிகமாக காணப்படுவதற்கு காரணம் எப்படியாவது வெற்றியை தமதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற மனப்பாங்கே. வெற்றி பெற்றவரே அனைத்தையும் எடுத்துக்கொள்கின்ற மனப்பாங்கு மாறவேண்டும். சமவாய்ப்பும் சமபங்கீடும் இல்லாத அரசியலில் சனநாயகம் மேலோங்காது. பாதிக்கப்படும், ஒடுக்கப்படும் மக்கள்,பெண்கள் உட்பட தாம் ஓரங்கட்டப்படுகின்றோம் என்பதைஉணரும் போது பல வழிகளில் தம்மை இனம்காட்டிக்கொள்வதோடு,அரசியலில் தாம் பிரவேசிக்க வேண்டும் என்ற உணர்வையும் ,ஆர்வத்தையும் பெறுகின்றனர், பெண்கள் அரசியலில் முனைப்பாக பங்கேற்க தகுந்த சூழ்நிலைகளை அரசியல்வாதிகளே தமது ஆக்கிரமிப்பு சிந்தனைகளால் உருவாக்கிக் கொடுத்துள்ளனர். ஆகவே தேர்தல்கள் எமது பிரதேசத்தில் நெருங்கிக் கொண்டுவரும் கால கட்டத்தில், தகுதியான கல்விமேம்பாடுள்ள பெண்கள் அரசியலில் போட்டியிடுவதற்கு தம்மை தயார்படுத்தும் நிலையை உருவாக்கிக் கொள்வது அவசியமும், காலத்தின் தேவையாகவும் உள்ளது.



## பெஜ்ஜிங் நான்காவது உலக பெண்கள் மாநாட்டில் முற்படுத்தப்பட்ட செயற்றிட்டம் (1995)

- பெண்களும் வறுமையும்
- பெண்கள் கல்வி பயிற்சி
- பெண்களும் சுகாதாரம்
- பெண்களுக்கெதிரான வன்முறை
- போர்க் காலங்களில் பெண்கள்
- பெண்களும் பொருளாதாரமும்
- பெண்கள் அதிகாரம் தீர்மானம் எடுத்தல்
- பெண்கள் முன்னேற்றத்திற்கான நிறுவன அமைப்பு
- பெண்கள் மனித உரிமைகள்
- பெண்களும் ஊடகங்களும்
- பெண்களும் சூழலும்
- பெண் பிள்ளைகள்

மேற் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான விடயங்கள் இம் மாநாட்டில் விவாதிக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்ட செயற்றிட்டம் உலகளாவிய ரீதியில் சகல நாடுகட்கும் பெண்கள் தொடர்பாக கவனிக்கவேண்டியப பல அமசங்களை சுட்டிக் காட்டியுள்ளதோடு அவற்றினை மேம்படுத்துவதற்கான வழிகாட்டி யாகவும் உள்ளது.

---


**உசாத்துணை நூல்கள்**

1. CEDAW பெண்கள் சமவாயம்
2. UNSCR 1325
3. நங்கை

# மகளிர் அபிவிருத்தி நிலையம்





தீபம் பிறிண்டேர்ஸ், 717, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம், T.P : 0772506234